# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## O.S.No. 154 Of 2019

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW1 |
| **Name of the Witness** | **:** | ஜெயந்தி |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 4th day of February, 2026.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

பிரதிவாதி எனது கணவரின் நண்பர் ஆவார். எனது கணவர் Cityunion வங்கியில் மேலாளராக பணிபுரிந்தார். 53 வயதில் எனது கணவர் விருப்ப ஓய்வு பெற்றார். எனது கணவருக்கு மாத ஓய்வூதியம் கிடையாது என்றால் ஓய்வூதியம் என்று இல்லாமல் Exgratia தொகையில் இருந்து 3 மாதத்திற்கு ஒருமுறை பணம் வரும். என் கணவர் 2009 ல் விருப்ப ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு வருடம் ஞாபகம் இல்லை. விருப்பஓய்வு பெற்ற பிறகு எனது கணவர் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். RBS என்ற நிதிநிறுவனத்தை பங்குதாரர்களுடன் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அதில் பிரதிவாதியும் ஒரு பங்குதாரர் என்றால் சரிதான்.

அவர் அல்லாமல் ராஜன் எட்வார்டு என்ற நபரும் பங்குதாரர் என்றால் சரிதான். நானும் கனராவங்கியில் அலுவலக உதவியாளர் மற்றும் காசாளர் பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். 2020 ல் பணி மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றேன். பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் மேற்சொன்ன வங்கி பணியில் இருந்தேன் என்றால் சரிதான். நான் Clerical பணியில் இருந்ததால் கடன் கொடுக்க மற்றும் வாங்க உயர்அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. எனது மாத சம்பளம் வழங்கும் சமயத்தில் வருமான வரி பிடித்தம் செய்து வழங்கப்படும். நான் தனிப்பட்ட முறையில் வருமானவரிக் கணக்கை 2016 காலகட்டத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு 2016- 2017 ல் நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்த போது 10.05.2016 ல் பிரதிவாதிக்கு ரூ.14 லட்சம் வழங்கியது குறித்து நான் குறிப்பிடவில்லை. எனது கணவரின் ஓய்வூதியத் தொகை மற்றும் எனது வங்கியின் நான் நகை அடமானம் வைத்து கிடைக்கப்பெற்ற தொகை மற்றும் பலவிதமான எனது வங்கியில் நான் பெற்ற கடன் ஆகிய தொகையை கொண்டு பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். என் கணவர் மற்றும் பிரதிவாதி நடத்தும் பங்குதாரர் தொழிலில் பணத் தேவையின் காரணமாக எனது கணவர் சொல்லி பிரதிவாதிக்கு ரூ.14 லட்சம் கைக்கடனாக ஆவணம் எதுவும் பெற்றுக்கொள்ளாமல் கடன் கொடுத்தேன். ஒரு மாதத்தில் கடன் தொகையை திரும்ப கொடுத்து விடுவதாக பிரதிவாதி கடன் பெற்றாரா என்றால் இல்லை சீக்கிரம் கொடுத்து விடுவதாக

சொல்லி கடன் கொடுத்தார். கடன் தொகை 10.05.2016 அன்று தான் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். காசோலை 15.05.2016 அன்று பிரதிவாதி கொடுத்தார். அன்றையதினம் காசோலையை நிரப்பி கொடுத்தார் என்றால் சரிதான்., பொறுப்பிற்காக ( Security) காசோலையை கேட்டு பெற்றேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் ( 2016 ஆம் ஆண்டு) எனது Net சம்பளம் எவ்வளவு என்று ஞாபகம் இல்லை. ரூ.70,000/- மொத்த சம்பளம் இருக்கும். ஒவ்வொரு மாதமும் பிடித்த தொகை வேறுபடும் காரணத்தினால் குறிப்பிட்டு எவ்வளவு Net சம்பளம் என்று என்னால் சொல்ல இயலாது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதால் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*